செட்டிமார் சிறப்பு.

நா. நா. நாச்சியப்பன் புதுமையின்
அன்பளிப்பு.

சுவாமி
சுத்தானந்த பாரதியார்.

செட்டிமார் - - - - சிறப்பு.

நா. நா. நாச்சியப்பன் புதுமையின்
அன்பளிப்பு.

போஸ் பிரசுராலயம், காரைக்குடி.

சுவாமி
சுத்தானந்த பாரதியார்.

9-9-38.

பதிப்புரை

புதியதோர் வழியை தனவணிக சமூகத்திற்கு காட்டியிருக்கும் தோழர் நா. இராமனுதன் அவர்கள் ஆண்டில் இளைஞராயினும் வீரத்திலும், கட்டுக்கடங்காத தேச பக்தியிலும், சமூக முன்னேற்றத்திலும் சிறந்தவராவர். தமது சொந்த ஊராகிய கண்டனூரில் ஸ்தாபித்திருக்கின்ற ஸ்ரீ ராமகிருஷ்ண சங்கத்திற்கு விதை போட்டவர்களுள் ஒருவர். அன்னார் காங்கிரஸ் பொன் விழாவின்போது பர்மாவில் செய்த அரிய வேலைகளை பர்மாவாழ் இந்தியர்கள் மறப்பதற்கில்லை. அன்பரின் வழியைப் பின்பற்றி பலரும் இத்தகைய அரிய நூல்களை புதுமை, திருமணம்போன்ற விசேஷ காலங்களில் வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இந் நூலாசிரியர் சுவாமி சுத்தானந்த பாரதியார் அவர்களின் அருமை, பெருமைகளை மக்கள் நன்கு அறிந்திருக்கின்றபடியால் அறிமுகப்படுத்தவேண்டிய தவசியமில்லை. அவர்கள் எழுதியுள்ள "திருக்குறளின் ப"த்தைப்படித்தால் தெவிட்டாத இன்பத்தையும், இனிய தமிழில், எளிய நடையில் இயற்றியுள்ள பாடல்களில் புதியதோர் உணர்ச்சியையும் நாம் பெருகின்றோம். இவ் வாசிரியரின் ஆராய்ச்சி அனுபவங்களை இச் சிறு நூலிலேயே காண்கின்றோம். சுவாமி சுத்தானந்த பாரதியார் அவர்கள் பல்லாண்டுகள் வாழ்ந்து தமிழ்ப் பணி புரியப் பிரார்த்திப்போமாக.

வாழ்க சுபாஷ்

காரைக்குடி, 7—9—38.

போஸ் பிரசுராலயத்தார்.

தனவணிகர் கும்மி.

(சுத்தானந்த பாரதியார்)

''''''''''''''''

எல்லார்க்கும் இன்பப் பொருளாலே —சக்தி
இறைவன் சோதியருளாலே
செல்வமும் ஈகையுஞ் சேர்ந்து நீடோங்குக
சேமமாய்ச் செந்தமிழ்ச் செட்டிகளே.

மன்னர்க்குப் பின்னவர், மன்னிளங்கோக்கள்
வளம்பெறு வாணிபர் இப்பர்களே;
தென்மொழிக் கற்பகஞ் செழிக்கச் செய்திடுஞ்
செட்டி நாட்டினர் வாழியவே!

கல்வி வளர்க்குந் தனவணிகர்—நல்ல
கைத்தொழில் காக்கும் தனவணிகர்
பல்வகையான தருமப் பணிகளைப்
பாரெங்குஞ் செய்யும் தனவணிகர்

சைவ சமயத்தைப் போற்றிடுவார்—கோயில்
திருப்பணிகளை யாற்றிடுவார்
தெய்வ பக்தியைப் பரப்பிடுவார்—நாட்டில்
தேவாரவோசை நிரப்பிடுவார்.

சத்திரஞ்சாவடி பசு மடங்களுஞ்
சாலைகள் சோலை குளங்கிணறு
வைத்திய சாலைகள் வாகாயமைத்தனர்
மன்னுயிர்த்தொண்டு செய் மாண்பினரே.

சிங்கை இலங்கை செய்கோன் பர்மா தேசங்கள்
சென்று குலத்தொழில் செய்திடுவார்
பொங்குந்திரவியம் போற்றிக் கருத்துடன்
புண்ணிய நல்வினை யாற்றிடுவார்.


வீட்டினிற் செட்டாக வாழ்ந்திடுவார்—ஏதும்
வீணின்றி மிக்கக் கணக்கிடுவார்,
நாட்டிற்குத் தாராளமாய்க் கொடுப்பார்—இவர்
நல்ல பொதுநலவூழியரே.

தேசவிடுதலை பெற்றிடவே—பல
தீரரை தந்த தனவணிகர்.
தேசக்கலைகள் செழித்திடவே—செல்வத்
திரு விளங்குந்தனவணிகர்.

வாழியவே நீடு வாழியவே—வானும்
மண்ணுள்ள மட்டிலும் வாழியவே!
ஏழு பிறப்பிலும் ஈகையுஞ் செல்வமும்
இலகிச் செட்டிகள் வாழியவே!

ஓம்.

சக்தி.



சுவாமி சுத்தானந்த பாரதியார்.

பீமன் போலுடம்பு வேண்டும்—அதிற்
பிடிப்பிடியாய்ச் சதைகள் வேண்டும்;
காமன் போலழகு வேண்டும்—சற்றுங்
கலங்காம லுறுதி வேண்டும்;

செட்டிமார் சிறப்பு.

மன்னருக்கு மணிமுடி சூட்டிய மரபினர்.

தனவணிகர் தமிழன்னையின் செல்வத் திருக் கரங்கள், இன்று நமது அருமைத் தாய் மொழியாகிய தமிழும், சைவமும் உயிர்த்திருப்பதே தனவணிகரின் அறச் செழிப்பினுல்தான். தனவணிகர் நமது பாரத நாட்டின் பழங்குடி மக்கள். சங்க காலந்தொட்டே தன வணிகர் புகழ்பெற்று விளங்கினர். சோழ மன்னருக்கு முடிசூட்டும் உரிமை பெற்றிருந்தனர் தனவணிகர். முற்காலத் தமிழ்நாடு ரோம், கிரீஸ், எகிப்து, சீனம், பர்மா, மலாயா, தென்னுப்ரிகா முதலிய நாடுகளுடன் கப்பல் வாணிபஞ் செய்து நாட்டில் ஏராளமான செல் வத்திரளைக்கொண்டு வந்து குவித்தது. தமது தேக்கு மரக்கலத்தில் தனவணிகர் உலகெங்கும் சென்று தமி ழகத்தில் உற்பத்தியாகும் கைந்நூலாடைகளையும், வாசனைச் சாமான்களையும், முத்து பவளம் முதலிய அலங்காரச் சாமான்களையும் விற்று வந்தனர். சேர, சோழ, பாண்டியர் நாட்களில் தனவணிகரே நமது நாட்டின் தரை வாணிபத்தையும் கப்பல் வாணிபத்தை யும் ஆண்டனர். வள்ளுவர் சீடர் ஏலேலசிங்கர் தன வணிகரே. அவர் கைராட்டினத்தில் நூற்ற நூலையும் கைத்தறியில் நெய்த ஆடையையும் கப்பலேற்றித் தொலை யில் கொண்டுபோய் விற்று வந்து ஏராளமான செல் வஞ் சேர்த்தார்.

வணிகர் குலத்து ஞானப் பெண்மணி.

இந்தியாவின் ஒப்பற்ற துறவியான பட்டினத்தடிகள் தனவணிகரே. அவரும் முத்துமணிகளைக் கப்பலேற்றி உலகெங்கும் வாணிபஞ் செய்து குபேரரானார் நமது பாரத தேசத்தின் ஒப்பற்ற ஞானப்பெண்மணியான காரைக்காலம்மையார் தனவணிகர் திலகமே. "காலனையும் வென்றோம், கடுநரகுங் கைகழன்றோம், மேலையிரு வினையும் வேரறுத்தோம்" என்று பாடும் தகுதியும் அருளும், அமர நிலையும் பெற்றாள் அந்த அம்மை. முற்காலத்தில் நமது நாடு பெற்ற பெருமையில் தனவணிகருக்குப் பெரும் பங்கு உண்டு.

திருவின் வீறு பெற்ற தனவணிகர்.

இக்காலத்திலும் அவ்வாறே தனவணிகர் ஈட்டுவது போலவே ஈவதிலும் சலியாதவர்கள். எக்காலத்திலும் தனவணிகர் செல்வமே சமுதாயத்தின் செழிப்பிற்குக் காரணமாயிருந்திருக்கிறது. முற்காலத்தில் ஏலேலசிங்கன் வள்ளுவரின் வேண்டுகோட் கிணங்கித் தான் குவித்த நெல்லைப் பஞ்சகாலத்தில் மிகவும் குறைந்த விலைக்குத் தந்து ஏழைகள் வயிறார உண்ணும்படி செய்தான். பட்டினத்தாரோ தமது செல்வத்திரளை எல்லாம் ஏழைகள் வாரிச் செல்லும்படி செய்து உலகைத் துறந்தார். சிலப்பதிகாரக் கதை தனவணிகர் நாகரிகக் கண்ணாடியேயாம். கரிகாற் சோழன் திருமாவளவனது தனவணிகரின் வாணிபச் செல்வத்தாலே தான். உற்றார் உறவினரைப்பேணி, விருந்தோம்பி, அறம் போற்றி, அன்புடன் இல்லறங்காப்பர் தனவணிகர் என்று அதிற் காண்கிறோம். தனவணிகர் "திருவின் வீறு" பெற்றவர் என்று கூறுகிறது சிலப்பதிகாரம்.

விடுதலைக்குப் பாடுபடும் வீரர் திருக்கூட்டம்.

தனவணிகரைச் செட்டிகள் என்பர். வடநாட்டில் சேட்டுகள் என்பர். சிரேஷ்டி என்றபதம் இவ்வாறு திரிந்து வழங்குகிறது. தனவணிகரின் ஒழுக்கத்தையும் முயற்சித் திறனையும், செல்வச் செழிப்பினால் அவர்கள் நமது சமுதாயத்திற்குச் செய்யும் பலவிதமான அறப்பணிகளையும் போற்றியே முற்காலப் பெரியார் அவர்களை சிரேஷ்டிகள் அல்லது உத்தமர்கள்—சிறந்தவர், மேலோர், பெருந்தகையாளர் என்று அழைத்தனர். தமிழ் நாகரிகத்தை இன்றும் அழியாது காத்துவருபவர், இந்த செட்டிமார்களேயாவர். முற்காலம் போலவே இவர்கள் தமது குலத்தொழிலை விடாது காப்பாற்றி வருகிறார்கள். பிராமணர் தமது குலத்தொழிலைக் கைவிடுத்துப் பல தொழில்புரிந்து வருகின்றனர். க்ஷத்திரிய தொகை குன்றிப் போனது. வைசியரும், வேளாளருமே இப்போது தமிழர் நாகரிகத்தைக் காத்துவருகின்றனர். முற்காலத் தமிழரிடையே சாதிவேறுபாடு கிடையாது. தொழில் பற்றியும் சமுதாயப் பணி முறையாக நடக்கவேண்டியது பற்றியும் தமிழரிடையே நான்கு தொழிற் பகுதியிருந்தது. அந்தணர், வீரர், வணிகர், வேளாளர் என்னும் இப்பகுதிகள் எல்லாம் ஒரே சரிசமமாகவே சமூகத்தின் பணியிற் பங்கு கொண்டன. உயர்வு தாழ்வு என்பதில்லை. தனவணிகரிடையே இன்றும் அத்தன்மை காணலாம். இப்போது தமிழ்நாட்டின் சுதந்திர வீரர் பலர், தனவணிகரிடையேயுள்ளனர். செட்டிமார்நாட்டிலேதான் நமது நாட்டின் விடுதலைக்

குப் பாடுபடும் காங்கிரசிற்குப் பெரும்பாலான அங்கத்தினர் உள்ளனர் என்பதைப் பெருமையுடன் காண்க.

இந்துமதத்தின் பாதுகாப்பாளர்.

இன்று தமிழுக்கும், கல்விக்கும், தொழிலுக்கும், சமய வளர்ச்சிக்கும் பணிபுரிவதில் தனவணிக சமுதாயமே முன்னணியில் நிற்கின்றது. காசிமுதல் இராமேசுவரம் வரையில் தனவணிகர் தருமமில்லாத கோயிலில்லை. நமது இந்து தர்மத்தின் முக்கியமான ஸ்தாபனமாகிய ஆலயங்கள் இன்று நிலைத்து நிற்பதே தனவணிகர் திருப்பணியாலேதான் என்று அனைவரும் அறிவர். தனவணிகர் பழைய ஆலயங்களைப் புதுக்கியமைக்கின்றனர். நல்ல இடங்களில் புதிய கோயில்களைக் கட்டுகின்றனர். கோயில் வழிபாடுகள் சரிவர நடக்க மானியங்கள் விடுகின்றனர். சேமநிதி ஏராளமாகத் தருகின்றனர். ஒரு கோயில் கட்டுவதென்றால் எத்தனையோ சிற்பிகள், கூலிகள், ஏழைகள், தொழிலாளருக்கும் பிழைப்புத் தருவதாகும். கோயில்களே நமது நாட்டின் சிற்பச் செல்வ நிலையங்கள். இவற்றின் மூலம் தனவணிகர் நமது சிற்பச் செல்வத்தைப் பாதுகாக்கின்றனர். கோயில்களையொட்டி தரும சத்திரங்கள் கட்டி ஏராளமான ஜீவகாருண்யப் பணி நடத்துவது தனவணிகரே. நமது நாடெங்கும் செட்டியார் சத்திரங்கள் உள்ளன. நமது திராவிட வேதமாகிய தேவார திருவாசகங்களை ஓதவும் ஓதுவிக்கவும் தனவணிகர் தருமப் பாடசாலைகள் ஆங்காங்கு அமைத்துள்ளனர். ஆரிய வேதத்தை ஓதவும் பாடசாலைகள் அமைத்துள்ளனர். இப்பாடசாலைகளில் மாண

வர் எக்கவலேயுமின்றி உண்டு இருந்து சமய நூல்களைப் பயிலுகின்றனர். நமது பாரதபூமியின் இரண்டு மகத்தான சமய தத்துவங்கள் வேதாந்தமும், சித்தாந்தமும், வேதாந்தத்திற்கே இப்போது பெரும்பாலான விளம்பரம் உள்ளது. சித்தாந்தம் சர்வமத சமரஸத்தின் அருளூற்று.

இறைவற்குத் தொண்டு செய்யும் பக்த சிகாமணிகள்.

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்னும் உண்மையை உலகிற்கீந்து உலக ஒற்றுமைக்கே வழி காட்டும் இந்த சித்தாந்த சமயத்தை வாழவைத்தவர் தனவணிகரேயாவர். ஆங்காங்கு சித்தாந்த பாடசாலைகள் கட்டித் தக்க புலவர்களைக் கொண்டு சிவதத்துவித நெறியைப் பரப்புகின்றனர் தனவணிகர். இது தனவணிகருக்கே ஒரு தனிப்பெருமையாகும். சித்தாந்த நூல்களை ஏராளமாகத் தனவணிகர் வெளியிட்டுதவியுள்ளனர். அருட்பா போன்ற சர்வ சமரஸப் பாடல்களை ஆயிரக்கணக்காக அச்சிட்டு இனாமாகவும் தனவணிகர் வழங்குகின்றனர். பசுமடங்கள் கட்டி நமது நாட்டின் பசுச் செல்வத்தைக் காக்கின்றனர். குழந்தைகளுக்கு இனாமாகப் பசும்பால் உதவுகின்றனர். ஊர்தோறும் தனவணிகர் குளங்கள் வெட்டியும், கிணறுகள் தோண்டியும், வைத்தியசாலைகள் அமைத்தும், சுகாதார நிலையங்கள் நிறுவியும், மக்களின் உடல் நலத்திற்கு எல்லையற்ற பணிபுரிகின்றனர். கோடைகாலத்தில் தனவணிகர் தண்ணீர்ப் பந்தல்கள் வைக்கின்றனர். கோயில்களில் சிறப்பாகத் திருநாட்கள் நடாத்தி அதன் சார்பில் ஏராளமான அன்னதானம் செய்கின்றனர்.

ஆங்கே தமிழ் வேதமும் ஆரிய வேதமும் முழங்கச் செய்கின்றனர். தகுந்த வித்துவான்களை வரவழைத்து சங்கீதம், பரதநாட்டியம், சமய சம்மந்தமான சொற்பொழிவு முதலியவைகளை நடத்திச் சுதேசக் கலைகளையும் தத்துவஞானத்தையும் வேதாந்த சித்தாந்த சமய நெறிகளையும் பரப்புகின்றனர். உதாரணமாகக் காளையார் கோவில் திருநாளில் ஏராளமான வித்வான்கள் சன்மானம் பெறுகின்றனர். ஏராளமான தொழிலாளிகளுக்கு வேலைகிடைக்கிறது. ஏராளமான மக்கள் பத்து நாட்கள் எக்கவலையுமில்லாமல் இறைவனை அன்பு செய்து சமய அறிவுபெற்று கலைச்சுவை நுகர்கின்றனர். தென்னாட்டில் செட்டிமார்கள் செய்துவரும் ஆலயப்பணியின் பயன் மிகப் பெரிது.

சர்வகலாசாலை ஸ்தாபித்த அண்ணாமலையார்.

இவ்வாறு நமது முற்காலத்தின் சாத்திரங்களையும் கலைகளையும் அறவினைகளையும் போற்றும் தனவணிகர் தற்காலத்திற்கேற்ற அறப்பணி, அறிவுப்பணி, நாட்டுப்பணி, சமுதாயப் பணிகளையும் புதுமுறைபற்றி ஏராளமாக நடத்துகின்றனர். இப்பணிகளின் சிகரம் அண்ணாமலை சர்வகலாசாலை. ஒரு தனி மனிதர் 50 லட்சம் கொடுத்து இன்னும் எவ்வளவோ பொருள் செலவிட்டு ஒரு ஒப்பற்ற சர்வ கலாசாலையை நிறுவியது இந்திய சரித்திரத்திலேயேநமது அண்ணாமலையார் ஒருவர் தான் என்பதை அனைவரும் அறியவேண்டும். நாட்டிற் சிறந்த புலவர்களை எல்லாம் அந்தக் கலாசாலை நன்கு ஆதரிக்கிறது. இப்போது இப்பல்கலைக் கழகத்தின் தலைமைப் தமிழ்ப்பண்டிதர் ஒரு தனவைசியர். பண்டிதமணி

கதிரேசஞ் செட்டியாரைத் தெரியாத தமிழர் இரார். தமிழன்னையின் முடிமணிகளில் நமது பண்டித மணியும் ஒருவர். அவர் அண்ணாமலைக் கழகத்தில் அமர்ந்து அரிய தமிழ்ப் பணிபுரிவது தனவணிக மரபிற்கே ஒரு பெருமையாகும். இந்த ஒப்பற்ற கலாநிலையமே தனவணிகர் புகழுக்கு அழியா ஒளி வீசிநிற்கிறது.

சமுதாய முற்போக்கில் தலைசிறந்த மக்கள்.

கடியாபட்டி போன்ற பல ஊர்களில் தனவணிகர் பள்ளிக்கூடங்கள் கட்டி சாப்பாடு போட்டு மாணவருக்கு இனமாகக் கல்வி புகட்டுகின்றனர். அக்கல்வி நிலையங்களால் நாட்டில் பல ஏழைப் பிள்ளைகள் அறிவைப் பெறுகின்றனர். முதன்மையாகத் தமிழ் வளர்ச்சிக்குத் தனவணிகர் ஒப்பற்ற பணி செய்திருக்கின்றனர். இன்று தனவணிகரிடையே பண்டித மணிகள் இருக்கின்றனர். தேசபக்தர் ராய. சொக்கலிங்கன் போன்ற கவிகள் உள்ளனர். கலைப்புலவர் உள்ளனர். நிகரற்ற பத்திராதிபர் உள்ளனர். பெண்கல்விக்காக முறையாகக் கல்வி நிலையம் வைத்து நடத்தும் அறிவாளர் உள்ளனர். சமூக சீர்திருத்தத்தை வீரமுடன் காரியத்திற் கொண்டுவரும் பொதுநல ஊழியர் உள்ளனர். மகாத்மா காந்தியின் சத்தியாக்கிரக வீரரில் சிலர் செட்டிமார்நாட்டில் உள்ளனர். 'ஊழியன்' 'குமரன்' 'செட்டிநாடு' "தனவணிகன்' 'வீரகேசரி' போன்ற அரிய பத்திரிகைகள் தனவணிகரால் நடத்தப்படுகின்றன. நமது சமுதாயத்தின் தீமைகளான தீண்டாமை பெண்ணடிமை இரண்டையும் ஒழிக்கத் தனவணிக வீரர்கள் அரும்பாடு பட்டு வருகின்றனர். "மாதர் மறுமணம்" என்ற பத்தி

ரிகை பெண்ணின் கண்ணீரைத் துடைக்க நாட்டில் ஒருபுதிய விழிப்பைத் தந்திருக்கிறது. மறுமணமும் தனவணிக சமுதாயத்தில் நடந்துள்ளது. திரு. சொ. முருகப்பன் மரகதவல்லி இருவரும் ராஜாராம் மோகன் ராயின் ஆவேசத்துடன் சமூக சீர்திருத்தப்பணிபுரி கின்றனர்.

இராட்டினத்தை சீதனமாக வழங்கினர்.

இவ்வாறு பழைய நன்மையும் புதிய நன்மை களும் சேர்ந்து இன்றுள்ள தனவணிக சமுதாயம் தமிழுலகிற்கே ஒப்பற்ற வழிகாட்டியாயுள்ளது. நமது நாட்டின் முன்னேற்றத்திற்கும் விடுதலைக்கும் சாத னங்களாகிய பலநன்மைகள் தொன்றுதொட்டே தன வணிகரிடையே இருந்துவருகின்றன. உதாரணமாக இன்று மகாத்மா காந்தி இயக்கத்தின் உயர்நிலையான கதர் தனவணிக மாதரிடையே தொன்றுதொட்டு இருந் ததே. ஆச்சிமார்கள் நீண்டகாலமாக கைராட்டினம் சுழற்றிவந்தனர். சில வீடுகளில் இன்னும் முன்னே நூற்றுநெய்த ஆடைகளைக் காணலாம். பெண்ணுக்கு ராட்டினத்தையும் பஞ்சுக்கொட்டும் கருவியையும் வில்லையும் தனவணிகர் சீதனமாக தருகின்றனர். சில வீடுகளில் பழைய ராட்டினங்களை இன்றும் இருக்கக் காணலாம். மகாத்மாகாந்தி இயக்கத்திற்கு முன்பே தன வணிகர் கதர் அணிந்தனர். நூல் நூற்றனர்.

தனவணிகரே தமிழ்நாட்டின் உயிர்நாடி.

இவ்வாறு தனவணிகர் இன்று தாய்மொழி, தாய் நாடு, சமயம், கல்வி, கலை, தொழில், பெண்விடுதலை,

தேசசுதந்திரம், சுகாதாரம், சமூகமுன்னேற்றம் அனைத்திற்கும் ஓயாது பணிபுரியும் பொதுநல வீரர்களாக திகழ்கின்றனர். இன்று தனவணிக வாலிபரிடையே ஒரு புதிய உணர்ச்சி பிறந்திருக்கிறது. சில தனவணிக வாலிபர்கள் ஜப்பான் அமெரிக்கா ஐரோப்பா நாடுகளுக்குச்சென்று காயிதம் செய்தல், யந்திரம், ஸினிமா முதலியதொழில்களைப் பயின்று வந்திருக்கிறார்கள். தாம் வெகு நாளாகச் செய்து வந்த வட்டித் தொழிலை மட்டும் இனி அவர்கள் நம்பியிருக்கமாட்டார்கள். பிற நாடுகளில் குடியேறித் தொழில் செய்வதுடன் நிற்கமாட்டார்கள். தமது அருமைத்தாய் நிலம் செல்வச் செழிப்புறவே இனித் தனவணிகர் ஓயா முயற்சி செய்வர். இப்போது தனவணிகர் ஐரோப்பியரின் கூட்டுறவு முறையில் நாகரிகமான பாங்குகளை நடத்துகின்றனர். இனி தமது பணத்தை நாட்டிற்கு வேண்டிய ஒரு தொழில் முயற்சியிற் போடுவர். உதாரணமாகத் தமிழ் நாட்டில் விளையும் மூங்கில்களை குத்தகை எடுத்து காயிதத் தொழில் நடத்தலாம். தனவணிகர் செல்வம் இனி இரும்புப் பெட்டிகளில் உறங்காது. ஆயிரக்கணக்கான ஏழைகளுக்கு உழைப்பும் பிழைப்பும் நல்கும்.

ஆற்றல்படைத்த தனவணிகர் எதிர்காலம்.

ஒரு கையில் திருவாசகமும் மறுகையில் ஏழைகளுக்கு கஞ்சிக் கலயமும் பிடிப்பர் தனவணிகர். வருங் காலத்தில் தனவணிகர் குண்டூசி முதல் ஆகாயக் கப்பல் வரையிற் செய்வர்; உப்பு முதல் கற்பூரம் வரையில் விளைவிப்பார். அதற்கேற்ற ஆற்றல் தனவணிகருக்கு இயல்பிலேயே அமைந்துள்ளது.

செட்டியார் சமூகம் சிறந்து விளங்குக.

தனவணிகர் தமக்கு இயல்பாயுள்ள தொழின் முயற்சியால் தமிழ் நாடு செல்வமும், கலையும், கல்வியும், அழகும், பொலிவும் எய்துக. தனவணிகரின் சமயத் தொண்டுகளால் தமிழகம் அருளழகுக் கோயிலாகுக. தனவணிகர் நீடூழி வாழ்க! தனவணிகர் ராக்பெல்ல ராகவும் போர்டுகளாகவும் எடிஸன்களாகவும் விளங்குக!

திரவியந்தேடும் செல்வத் தனவணிகர்.

தொழில் முயற்சியில் தனவணிகர் ஒப்பற்று விளங்குகின்றனர். பர்மாவில் ஏராளமான முதல் போட்டு காட்டைப் பயிர் நிலமாக்கியது தனவணிகரே. பர்மிய வாணிபத்திற்கு இன்றும் அவர்கள் உயிர்நாடியா யிருக்கிறார்கள். இராஜ ராஜ சோழன் காலம் முதலே தனவணிகர் வெளிநாடுகளுக்குச்சென்று முதல்போட்டு வாணிபம் செய்து வந்தனர். மலாயாவில் தனவணிகர் ரப்பர் தோட்டத்திலும் லேவாதேவியிலும் ஏராளமான முதல் போட்டுள்ளனர். சைகோன், சையாம், கீழிந்திய தீவுகள் இலங்கை முதலிய இடங்களிலும் தனவணிகர் குடியேறி வியாபாரம் செய்கின்றனர். தமிழும் தமிழர் நாகரிகமும் கடல் கடந்து பரவ, தனவணிகர் இவ்வாறு துணை செய்கின்றனர்.

குமரன் பவர் பிரஸ், காரைக்குடி.

இரண்டாம் பதிப்பு.

ராஷ்டிரபதி

சுபாஷ்சந்திர போஸ்

(அழகிய படங்களுடன்)

(தமிழ் நாட்டுத்தலைவர் முகவுரையுடன் கூடியது.)

தியாகம், வீரம் முதலிய அருங்குணங்களின் இருப்பிடமான காங்கிரஸ் தலைவரின் சரித்திரத்தை நாமெல்லோரும் எளிதில் தெரிந்து கொள்வதற்காக இனிய தமிழில், எளிய நடையில் எழுதியிருக்கின்ற இப்புத்தகத்தைப் படியுங்கள்.

விலை அணா 4

போஸ் பிரசுராலயம்,

ஆரு ஆ. வீதி, காரைக்குடி.